டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் வெல்லர்ஸ்

agridoctor.in | 8.11.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 119 | Madurai | Online Edition

அரிசி விற்பனை இலக்கு 50 லட்சம் டன்னாக உயர்வு

இருப்பு விவரங்களை வாரந்தோறும் வெளியிட உத்தரவு

புது தில்லி, நவ.7

நாட்டில் அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்தவும், பதுக்கல், கள்ளச்சந்தை விற்பனையைத் தடுக்கவும் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.

அரிசி, நெல் இருப்பு விவரம் கட்டாயம் : நாடு முழுவதும் அரிசி, நெல் இருப்பு வைத்துள்ள வியாபாரிகள், மொத்த, சில்லறை விற்பனையாளர்கள், பெரிய வணிக நிறுவனங்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள் ஆகியோர் தங்களின் இருப்பு விவரங்களை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மத்திய அரசின் இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். பாசுமதி, பிரீமியம் பாசுமதி அல்லாத அரிசி, சாதாரண அரிசி, புழுங்கல் அரிசி, உடைந்த அரிசி, நெல் என ஆறு வகைகளில் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். பதிவு செய்யாதவர்கள், இருப்பு வரம்பை மீறுபவர்கள் ஆகியோர் மீது அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா ஆகிய மாநிலங்கள் தேவைக்கேற்ப அரிசி, நெல்



அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

விடுமுறை அறிவிப்பு

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அக்ரிடாக்டர்.இன் அலுவலகத்திற்கு 8.11.26 மற்றும் 9.11.26 ஆகிய இரண்டு நாட்கள் விடுமுறை. எனவே எமது அடுத்த மின்னிதழ் 11.11.26 புதன்கிழமை வெளிவரும்.

- நிர்வாகி

இருப்புக்கு உச்சவரம்பு விதிக்கலாம். இந்த உத்தரவு 2027 ஜனவரி 31 வரை அமலில் இருக்கும்.

தென் மாநிலங்களில் அரிசி கிடைப்பதை அதிகரிக்க தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு (NAFED), தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு (NCCF) ஆகிய அமைப்புகளுக்கு கூடுதல் பாரத் அரிசி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மலிவு விலையில் அரிசி கிடைப்பதுடன், சில்லறை விலையும் கட்டுக்குள் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2026-27-ம் ஆண்டுக்கான திறந்தவெளிச் சந்தை விற்பனைத் திட்டத்தின் (OMSS-ம்) கீழ், மின்னணு ஏலம் மூலம் விற்கப்படும் அரிசியின் இலக்கு 25 லட்சம் டன்னிலிருந்து 50 லட்சம் டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. 2026 அக்டோபர் 31 வரை 25 லட்சம் டன் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 11 லட்சம் டன் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது.

வாழையில் நூற்புழு மேலாண்மைக்கான கிழங்கு சீவுதல் மற்றும் பார்லினேஜ் செயல்விளக்கம்

திருவண்ணாமலை, நவ.7

கிருஷ்ணகிரி மாவட்டம், பையூரில் உள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள், கிராமப்புற தோட்டக்கலைப் பணி அனுபவத் திட்டத்தின் (RHWE) கீழ், வாழ வச்சனூர் வாழையில் நூற்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்தவும், ஆரோக்கியமான பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் வாழைக் கிழங்கு சீவுதல் மற்றும் பார்லினேஜ் முறைகள் குறித்த செயல்விளக்கத்தை நடத்தினர்.

இந்நிகழ்வில் M.ஆர்த்தி, A.அஸ்வினி, K.அவந்திகா, G.அழகு முனீஸ்வரி, S.பாலின் பிரின்சி, B.பவதாரணி, C.தனலட்சுமி, P.தாரணி, மூ.தர்ஷினி, M.தர்ஷினி, S.துர்கா ஆகிய மாணவிகள் நேரடியாகச் செயல்விளக்கம் அளித்தனர். வாழைக்கன்றுகளை நடவு செய்வதற்கு முன் மேற்கொள்ள வேண்டிய கிழங்கு சீவுதல் மற்றும் பார்லினேஜ் முறைகளின் முக்கியத்துவம், அவற்றின் பயன்கள், நூற்புழு மேலாண்மையில் அவற்றின் பங்கு ஆகிய வற்றை விளக்கினர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

பயிர் வகை பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பயிற்சி



கடலூர், நவ.7 கடலூர் மாவட்டம், நல்லூர் வட்டாரம், வலசை கிராமத்தில் 6.11.26 அன்று பயிர் வகை பயிர்களில் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பயிற்சி நடைப்பெற்றது.

இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர், முனைவர் க.நடராஜன், சிறப்புரை யாற்றினார். மேலும் பயிர் வகை பயிர்களில் விதை உற்பத்தி, சாகுபடி தொழில்நுட்பங்கள், நிலம் தயாரிப்பு, விதை நேர்த்தி செய்யும் முறை, புதிய இரகங்கள், ஒருங்கிணைந்த உர நிர் வாகம், ஒருங்கிணைந்த களை நிர்வாகம், நுண்ணூட்டக் கலவை யின் பயன்பாடு, மண் மற்றும் நீர் பரிசோதனை முறை மற்றும் 'TNAU பயறு ஒன்டர்' இலைவழி மூலமாக தெளிக்கும் முறை பற்றிய தொழில்நுட்பங்களை தெளிவாக விவசாயிகளுக்கு விளக் கினார். மேலும் இப்பயிற்சியல் பயிர்வகை பயிர் களுக்குக்கேற்ற அனைத்து வகையான பூச்சி கொல்லிகள் மற்றும் பூஞ்சாணக் கொல்லிகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. இப்பயிற்சியில் வலசை கிராமம், நல்லூர் வட்டாரத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.



அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

கார்பன் வேளாண்மையை மேம்படுத்துவதற்கான காலநிலை மாற்றத்தைத் தாங்கும் மண்வள மேலாண்மை உத்திகள் குறித்த மண்டலப் பயிலரங்கின் தொடக்க விழா

கோயம்புத்தூர், நவ.7

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், இயற்கை வள மேலாண்மை இயக்ககத்தின் கீழ் இயங்கும் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையில், கரிம வேளாண்மையை மேம்படுத்துவதற்கான காலநிலை மாற்றத்தைத் தாங்கும் மண்வள மேலாண்மை உத்திகள் என்ற தலைப்பிலான மண்டலப் பயிலரங்கின் தொடக்க விழா 05.11.26 அன்று நடைபெற்றது.



தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையைச் சார்ந்த வேளாண்மை அலுவலர்கள் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்களுக்காக இப்பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது.

காலநிலை மாற்றத்தைத் தாங்கும் மண்வள மேலாண்மை நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மண்ணின் நலத்தை மேம்படுத்துவதிலும், நிலையான வேளாண் வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் கரிம வேளாண்மையின் பங்கு குறித்த அறிவை மேம்படுத்துதல் ஆகியவை இப்பயிலரங்கின் முக்கிய நோக்கங்களாகும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் இரா.கு.காளீஸ்வரி வரவேற்புரை வழங்கி, பயிலரங்கின் நோக்கங்கள் மற்றும் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். மேலும், வேளாண்மை மற்றும் இயற்கை வள மேலாண்மையில் தற்போது உருவாகி வரும் சவால்களை எதிர் கொள்வதில் இத்தகைய பயிலரங்குகள் வகிக்கும் பங்கு குறித்தும் விளக்கினார்.

கோயம்புத்தூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எம்.தமிழ்ச்செல்வி, வாழ்த்துரை வழங்கினார். அதில், பசுமை இல்லவாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன், மண்ணில் அங்ககக் கரிம அளவை அதிகரிக்கும் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பரவலாகக் கொண்டு செல்லுமாறு பயிலரங்கில் பங்கேற்ற அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், இயற்கை வள மேலாண்மை இயக்குநர் முனைவர் சு.கார்த்திகேயன் சிறப்புரையாற்றினார். மண்ணின் நலத்தைப் பேணிப் பாதுகாப்பதில் மண்ணின் கரிமக் கார்பன் அளவை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மேலும், கரிம வேளாண்மைத் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே ஊக்குவிப்பதுடன், கரிம வர்த்தகத்தின் மூலம் விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

பயிலரங்கின் ஒருங்கிணைப்புச் செயலரும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறைப் பேராசிரியருமான முனைவர் கா.சத்தியபாமா நன்றியுரை வழங்கினார். இப்பயிலரங்கில் தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையைச் சார்ந்த மொத்தம் 72 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கூமான்காடு கிராமத்தில் கால்நடை மருத்துவ முகாம்!



சேலம், நவ.7

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரத்தில் உள்ள கூமாங்காடு கிராமத்தில், கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் (RAWE) கீழ், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியின் நான்காம் ஆண்டு மாணவர்கள் லோகேஷ், மதன், மதன்ராஜ், மணிவாசகர், முகேஷ் குமார், முகில் தர்சன், முத்துசீனி சிதம்பரம், நந்தகுமார் மற்றும் நட்ராஜ் ஆகியோர் கால்நடை மருத்துவர்களுடன் இணைந்து கூமன்காடு கிராமத்தில் கால்நடை மருத்துவ முகாமை நடத்தினர்.

இம்முகாமில் பனமரத்துப்பட்டி கால்நடை மருத்துவமனை மருத்துவர் வினோத்குமார் மற்றும் கொண்டலாம்பட்டி கால்நடை மருத்துவர் மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டு கால்நடை களுக்குத் தேவையான மருத்துவச் சிகிச்சைகளை வழங்கினர். மேலும், 1962 நடமாடும் கால்நடை மருத்துவ சேவை மையத்தின் ஆலோசகர் சைரேகா மற்றும் அவரது மருத்துவக் குழுவினரும் பங்கேற்று கால்நடைகளுக்கான மருத்துவப் பணிகளை மேற்கொண்டனர்.

இம்முகாமின் போது மாணவர்கள் மருத்துவர்களுக்கு உறு துணையாக இருந்து மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்தல், மாடு, ஆடு மற்றும் நாய்களுக்கு குடற்புழு நீக்கம் செய்தல், கால்நடைகளுக்குத் தேவையான ஆன்டிபயாடிக் ஊசிகள் செலுத்துதல் உள்ளிட்ட பல்வேறு மருத்துவப் பணிகளில் உதவினர். மேலும், கால்நடைகளின் நோய்களைத் தடுக்கும் முறைகள், சரி யான பராமரிப்பு, ஊட்டச்சத்து மற்றும் இனப்பெருக்க மேலாண்மை குறித்த ஆலோசனைகளும் கால்நடை வளர்ப் பாருக்கு வழங்கப் பட்டன. மேலும், இம்முகாமில் ஆவின் நிறுவனத்தின் உதவிப் பொது மேலாளர் (AGM) சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, முகாமில் பங்கேற்ற கால்நடை வளர்ப்போருக்கு கால்சியம் சத்து மாவு மற்றும் தீவனச் சோள விதைகளை வழங்கினார். கால்நடைகளின் உடல் வளர்ச்சி, எலும்பு வலிமை, பால் உற்பத்தி மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டில் தாது உப்புகள் மற்றும் தரமான கால்நடைத் தீவனங்களின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

இந்தக் கால்நடை மருத்துவ முகாமின் மூலம் கிராமப்புற கால்நடை வளர்ப்போர் தங்கள் கால்நடைகளுக்குத் தேவையான மருத்துவச் சிகிச்சைகளைப் பெற்றதுடன், கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவதற்கான நடைமுறை ஆலோசனைகளையும் அறிந்து பயனடைந்தனர். இத்தகைய முகாம்கள் மூலம் விவசாயி களுக்கும் கால்நடை மருத்துவத் துறையினருக்கும் இடையிலான தொடர்பு மேம்படுவதுடன், கிராமப்புற கால்நடை வளர்ப்போரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் உதவியாக இருக்கும்.

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்



மூவரைவென்றான் கிராமத்தில் விவசாயிகளுக்கு சமச்சீர் உரப்பயன்பாடு குறித்து நேரடி பயிற்சி

விருதுநகர், நவ.7

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டாரம், மூவரை வென்றான் கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) மற்றும் வத்திராயிருப்பு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் இணைந்து நடத்திய சமச்சீர் உரப்பயன்பாடு மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த சிறப்பு விவசாயப் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமிற்கு வத்திராயிருப்பு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.செல்வராணி தலைமை தாங்கி, தலைமை உரையற்றினார். அவர் தனது உரையில், இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்து, மண்ணின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதன் மூலம் மட்டுமே விவசாயத்தில் நிலையான லாபத்தை ஈட்ட முடியும் என்று விவசாயிகளுக்கு வலியுறுத்தினார்.

தொடர்ந்து, வத்திராயிருப்பு வட்டார வேளாண்மை அலுவலர் கா.அரிபுத்திரன் முதன்மைப் பயிற்சியாளராகக் கலந்து கொண்டு, விவசாயிகளுக்கு விரிவான ஆலோசனைகளை வழங்கினார். அவர் பேசுகையில், யூரியா அல்லது டி.ஏ.பி (DAP) போன்ற இரசாயன உரங்களை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதால் மண்ணில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் 'ஊட்டச்சத்து எதிர்ப்புத் தன்மை' (Nutrient Antagonism) என்ற அறிவியல் கோட்பாடு குறித்து விளக்கமளித்தார். 'மண்ணில் ஏதேனும் ஒரு சத்து தேவைக்கு அதிகமாக இருந்தால், அது பயிர்கள் மற்றுமொரு முக்கிய சத்தை உறிஞ்சுவதைத் தடுத்து விடும். உதாரணமாக, பாஸ்பரஸ் அதிகமானால் துத்தநாகச் (Zinc) சத்து பற்றாக்குறை ஏற்படும்' என்று எச்சரித்த அவர், விவசாயிகள் மண் பரிசோதனை அட்டையின் (Soil Health Card) பரிந்துரைப்படி மட்டுமே உரமிட வேண்டும் என்றும், இரசாயன உரங்களுடன் தொழு உரம், மண்புழு உரம் போன்ற இயற்கை உரங்களை இணைத்துப் பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

நேரடி செயல்விளக்கம் மற்றும் கண்காட்சி



விவசாயிகளின் எளிமையான புரிதலுக்காக, பயிற்சிக் களத்திலேயே நேரடி செயல் விளக்கம் (Live Demonstration) செய்து காண்பிக் கப்பட்டது. உரங்களை ஒரே தாரகையாக இடாமல், பயிரின் வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்பப் பிரித்து இடுவது எப்படி மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது விவசாயிகளுக்குத் செயல்முறையாகக் காண்பிக்கப் பட்டது. மேலும், பயிர்களில் ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாடு களின் அறிகுறிகளை விளக்கும் புகைப்படங்கள், துத்தநாக சல்பேட், போரான் போன்ற நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் உயிர் உரங்கள் அடங்கிய சிறப்புக் கண்காட்சிக்கும் (Agricultural Exhibition) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்பயிற்சி முகாமில் மூவரைவென்றான் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் (Trainees) கலந்து கொண்டு தங்களது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெற்றனர்.

நுண்ணூட்ட உரங்கள், உயிர் உரங்கள் மானியத்திட்டங்கள் பயன்பாடு குறித்து துணை வேளாண்மை அலுவலர் பால கிருஷ்ணண் எடுத்துரைத்தார்.

இப்பயிற்சிக்கான முழு ஏற்பாடுகளையும் வத்திராயிருப்பு வட்டார வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி மஞ்சுளா, உதவி தொழில்நுட்ப மேலாளர் சுபா மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் ஆகியோர் இணைந்து சிறப்பாகச் செய்திருந்தனர்.



நெம்மேலி கிராமத்தில் இயற்கை வேளாண் பண்ணையைப் பார்வையிட்ட RAWE மாணவிகள்!



திருவாரூர், நவ.7 திருவாரூர் மாவட்டம், கோட்டூர் வட்டாரத்திற்கு உட்பட்ட நெம்மேலி கிராமத்தில் செயல்பட்டு வரும் இயற்கை வேளாண் பண்ணையை, கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு இளங்கலை வேளாண்மை மாணவிகள், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE Programme) கீழ் பார்வையிட்டனர்.

பண்ணையின் செயல்பாடுகள், இயற்கை முறையில் பயிர் சாகுபடி செய்தல் மற்றும் மண் வளத்தைப் பாதுகாக்கும் நடை முறைகள் குறித்து பண்ணையின் உரிமையாளர் சரவணன் மாணவிகளுக்கு விளக்கமளித்தார். இயற்கை உரங்கள், உயிர் உரங்கள் மற்றும் பண்ணையில் கிடைக்கும் இயற்கை வளங் களைப் பயன்படுத்தி பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் முறைகள் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும், ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, இயற்கை இடுபொருட்கள் மூலம் மண் வளத்தைப் பராமரிக்கும் அணுகு முறைகள் குறித்து மாணவிகள் கேட்டறிந்தனர். பயிர் சுழற்சி, பசுந்தாள் உரமிடுதல், மட்கிய தொழு உரம் மற்றும் தாவர அடிப்படையிலான பூச்சி மேலாண்மை முறைகள் போன்ற இயற்கை வேளாண் நுட்பங்களின் முக்கியத்துவமும் விளக்கப்பட்டது.

இயற்கை வேளாண்மையில் இடுபொருட்கள் தயாரித்தல், அவற்றைப் பயன்படுத்தும் முறை, உற்பத்திச் செலவைக் கட்டுப் படுத்துதல் மற்றும் விளைபொருட்களைச் சந்தைப்படுத்துதல் போன்ற நடைமுறை அம்சங்கள் குறித்தும் மாணவிகள் கலந்துரையாடினர்.

இந்தப் பண்ணைப் பார்வையின் மூலம் இயற்கை வேளாண் முறைகள், நிலையான வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த நடைமுறை அறிவை மாணவிகள் பெற்றனர். விவசாயிகளின் அனுபவங்களை நேரடியாக அறிந்து கொள்ள இந்தக் களப்பயணம் பயனுள்ளதாக அமைந்தது.

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

சங்க காலத்தில் மழைமானி தெரியுமா?

சங்க காலத்தில் திரவப் பொருட்களை அளந்து காண சேர், படி, நாழி, மரக்கால் போன்ற பாத்திரத்தாலான அளவுக் கருவிகள் இருந்தன. ஆனால் பெய்யும் மழையின் அளவை அளந்து பார்த்து அறிந்து கொள்ள குறியீடு பொறிக்கப்பட்ட இக்கால மழைமானிகள் போல அக்காலத்தில் இல்லை. அதுபோன்றே குளம் மற்றும் ஆற்றின் நீரை அளவிடும் துல்லியமான நுட்பமும் அக்காலத்தில் இல்லை.

தற்காலத்தில் வெட்ட வெளியான உலர்ந்த இடத்தில் செ.மீ மில்லி மீட்டர் போன்ற அளவுக் குறியீடு பொறிக்கப்பட்ட சோதனை குழாய் போன்ற கண்ணாடியிலான மழைமானி (RAIN GAUGE) வைக்கப்பட்டுள்ளன.

சங்க கால இலக்கியத்தில் மழைமானி?

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்து இலக்கிய நூலான நெடுநெல் வாடை இலக்கியத்தில் தெளிவாக கூறப் பட்டுள்ளது. பத்துபாட்டுள் ஒன்றான இவ்விலக்கியத்தை பாடிய, நக்கீரர், அதில் தலையாலங்கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் அரண்மனைத் தோற்றத்தை சிறப்புற பாடி அதில் மழைமானியை பற்றி கீழ்க்கண்ட வரிகளில் கூறியுள்ளார்.

'ஜயவிஅப்பிய நெய்யணி நெடு நெல்' எனத்தொடங்கும் பாடலில் மன்னரின் அரண்மனையின் மேல்பகுதியில் வெள்ளிய நில முற்றம் இருந்தாகவும், அதனுடைய ஓரிடத்தில் பிளந்த மகரவாய் முதலையின் வாய் போன்ற தெளிந்த நீர் பந்தல் அமைப்பு மழைநீரால் நிறைந்ததாக கூறியுள்ளார். இதை அம்பணம் என பெயரிட்டு பாடியுள்ளார். இது ஒரு அளவு கருவியாக அந்த காலத்தில் மழையை அளக்கப் பயன்பட்டதாக தெரிகிறது. மழைப்பொழிவைத் துல்லியமாக கணக்கிடும் கருவிகள் அக்காலத்தில் இல்லையென்றாலும் அதிக அளவு மழை பெய்யும் போது அம்பணத்தில் நீரையும், அந்நீரின் அளவைக் கொண்டு மழையின் அளவைத் தெரிந்து கொண்டனர்.

விவசாயிகளின் உழவு மானி ஏது தெரியுமா?

கிராமப்புறங்களில் ஆட்டுக்கல், உரல் வீடுகளின் முற்றத்தில் வெட்ட வெளியில் இருக்கும். அதனுடைய குழிகளில் விழும் மழைநீரின் அளவைக் கொண்டு அது நிரம்பி இருந்தால் அதை ஒரு உழவு மழை என்பார்கள்.

நவீன காலத்தில் AUTOMATIC WEATHER STATION வட்டார வாரியாக உள்ளன. அந்த காலத்தில் மழைப்பேறும் மக்கட் பேறும் அந்த மகேசனுக்கே தெரியாது என்பார்கள்.

தற்போது மழை வானிலை விபரங்களை மேகத்தூத் (MEGHDOOT) செயலி வாயிலாக துல்லியமாக கண்டறியலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

பெருங்காயக் கரைசல் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி மகசூலை அதிகரிக்க விவசாயிகளுக்கு செயல்விளக்கம்!



நாமக்கல், நவ.7

நாமக்கல் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியின் வேளாண் மாணவர்கள், கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சித் திட்டத்தின் (RAWE) கீழ், பனமரத்துப்பட்டி கிராம விவசாயிகளுக்கு பெருங்காயக் கரைசல் தயாரித்தல் மற்றும் அதன் பயன்பாடு குறித்த செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சியில் பெருங்காயத்தைக் கொண்டு கரைசல் தயாரிக்கும் முறை, அதன் பயன்பாடு மற்றும் பயிர்களில் பூச்சித் தாக்குதலைக் குறைப்பதற்கான பாரம்பரிய வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு மாணவர்கள் செயல்விளக்கத்துடன் எடுத்துரைத்தனர்.

மேலும், பெருங்காயக் கரைசலைப் பயன்படுத்துவதன் நோக்கம், சரியான முறையில் தயாரித்து பயன்படுத்த வேண்டியதன் அவசியம் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கப்பட்டது.

சென்னை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு இணை இயக்குநர் ஆய்வு



திருச்சி, நவ.7

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இணை இயக்குநர் சு.சாந்தி 06.11.26 அன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். தேனீர்பட்டி கிராமத்தில் பதிவு செய்துள்ள உளுந்து VBN 10 விதைப்பண்ணைகளை ஆய்வு செய்தார். விதைப்பண்ணை ஆய்வின் போது விதைப் பண்ணைகளில் கலவன் நீக்குதல் பற்றியும், பயறுவகைப் பயிர்களில் தரமான விதைகள் மற்றும் அதிக மகசூல் பெற 2% DAP கரைசல் தெளிக்கவும் அறிவுறுத்தினார்.

மேலும் திருவெறும்பூர் வட்டாரத்தில் உள்ள தேசிய விதைக்கழகத்தின் விதைச் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திப்பணி மற்றும் சான்றுப் பணியினை பார்வையிட்டார். சுத்திகரிப்பின் போது கலப்பினைத் தவிர்க்க கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி களப் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

ஆய்வின் போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்திற்குத் தேவையான சான்று பெற்ற விதைகள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளனவா என்பதை கேட்டறிந்தார். விதைச்சான்று அலுவலர்கள் விதைச்சான்று நடைமுறைகள் குறித்த தொழில்நுட்ப அறிவை மேம்படுத்திக் கொள்ளுமாறு அறிவுரை வழங்கினார். ஒவ்வொரு பயிரின் இரகங்களுக்கான தனித்துவமான குணாதிசயங்களை பற்றி முழுமையாக அறிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

அவர் தமது அறிக்கையில் இம்மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் இதுவரை 448.82 எக்டர் விதைப்பண்ணை பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் 2238.3 மெ.டன் விதை சான்று செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கிற்கு குறைவின்றி நடப்பு சம்பா பருவத்தில் சாதனை செய்திடக் கேட்டுக் கொண்டார்.

ஆய்வின் போது திருச்சிராப்பள்ளி விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி, முசிறி விதைச்சான்று அலுவலர் இரா.சோபனா மற்றும் காட்டூர் விதைச் சான்று அலுவலர் ரெ.முருகவேல் ஆகியோர் உடனிருந்தனர்.

அனைத்து விவசாயிகளும் சான்று பெற்ற விதைகளை வாங்கி சாகுபடி செய்யவும் இரட்டிப்பு மகசூல் பெற்று மும்மடங்கு லாபம் பெறவும் கேட்டுக்கொண்டார்.



தளி வட்டாரத்தில் தேசிய இயற்கை வேளாண் இயக்க திட்டப் பயிற்சி

கிருஷ்ணகிரி, நவ.7

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டாரத்தில் 'தேசிய இயற்கை வேளாண் இயக்கம்' திட்டம் குறித்து பயிற்சி நடைபெற்றது. இது குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் சி,முருகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, ரு

இப்பயிற்சியில் வேளாண்மை இணை இயக்குநர், கிருஷ்ணகிரி, வேளாண்மை உதவி இயக்குநர், தளி, வேளாண்மை அலுவலர், தளி, துணை வேளாண்மை அலுவலர், தளி, உதவி வேளாண் அலுவலர்கள் மற்றும் தளி வட்டாரத்திற்கு உட்பட்ட கக்கதாசம், அன்னியாளம், கும்ளாபுரம், கோட்டமடுகு, உனிசேநத்தம் ஆகிய கிராமங்களிலிருந்து 125 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

த.ரேணுகா, தேசிய வேளாண் இயக்கம் குறித்து திட்ட விளக்கவுரையாற்றி பயிற்சி குறித்து வரவேற்புரை வழங்கி சிறப்பித்தார். வேளாண்மை இணை இயக்குநர், கிருஷ்ணகிரி கா.உமா இயற்கை விவசாயத்தின் நோக்கம் மற்றும் பயன்கள் குறித்தும் மண்வள மேலாண்மை குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக கூறினார்.

வேளாண்மை உதவி இயக்குநர் சி.முருகன், கடந்த நிதியாண்டில் நடைபெற்ற இத்திட்டத்தின் பயன்கள் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக கூறினார்.

உதயன் (வேளாண்மை) வேளாண் அறிவியல் மையம், எலுமிச்சங்கிரி, இயற்கை இடுபொருட்களான பஞ்சகாவ்யா, இயற்கை பூச்சி விரட்டி, ஜீவாமிர்தம், மீன் அமிலம், அமிர்த கரைசல் ஆகியவற்றின் பயன்கள் பற்றியும், தயாரிப்பு முறைகள் பற்றியும் விரிவாக கூறினார். இயற்கை பூச்சி விரட்டி தயாரிப்பு முறைகளான : இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்த இயற்கை பூச்சி விரட்டி தயார் செய்ய வேப்ப இலை – 1 கிலோ, ஊமத்தை இலை – 1 கிலோ, நொச்சி இலை – 1 கிலோ, எருக்கு இலை – 1 கிலோ, ஆடாதொடா இலை – 1 கிலோ, மாட்டு கோமியம் – 5 லி என மேற்குறிப்பிட்ட இலை வகைகளை சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொண்டு மண் பானைக்குள் போட்டு

அதனுடன் 5 லிட்டர் கோமியம் ஊற்றி மண்பாணையை வாய் பக்கம் மட்டும் தெரியும்படி மண்ணில் புதைத்து விடவேண்டும் பின்பு வாய் பகுதியை மூடி வைத்து மூடி விட்டு ஏழு முதல் பத்து நாட்கள் கழித்து திறந்து வடிகட்டி இதன் சாறை அனைத்து வகைப் பயிர் களுக்கும் தெளிப்பதின் மூலம் இயற்கை முறையில் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம், இக்கரைசலை 10 லிட்டர் அளவுள்ள தெளிப் பானுக்கு 500 மில்லி என்றளவில் கலந்து காலை (அ) மாலை வேளையில் தெளிக்கலாம். மேலும் 20 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்கலாம், இக்கரைசலைத் தெளிப்பதன் மூலம் அஸ்வினி, இலைப்பேன் போன்ற தீமை செய்யும் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப் படுத்தலாம் எனவும் விவசாயிகளுக்கு கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர், தளி செல்லையா பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் செய்திருந்தனர்.

கிராம சபைக் கூட்டத்தில் வேளாண் மாணவர்கள் பங்கேற்பு!



சேலம், நவ.7

சேலம் மாவட்டம், சந்தியூர் கிராமத்தில் 1.11.26ல் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், வாழவச்சனூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த 25 வேளாண் மாணவர்கள், RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் கிராம மக்களுடன் இணைந்து கிராமத்தின் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள், அவற்றிற்கான தீர்வுகள் மற்றும் கிராம வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

இந்தக் கிராம சபைக் கூட்டத்தின் மூலம் மாணவர்கள் கிராம மக்களின் தேவைகள், உள்ளூர் பிரச்சினைகள், அரசுத் திட்டங்கள் மற்றும் ஊரக வளர்ச்சியில் பொதுமக்களின் பங்களிப்பு குறித்து நடைமுறை அறிவைப் பெற்றனர். மேலும், கிராம மக்களிடையே பல்வேறு அரசுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில் கிராம மக்கள் மற்றும் வாழவச்சனூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த 25 வேளாண் மாணவர்கள் பங்கேற்றனர்.

கார்த்திகை பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாய பெருமக்களுக்கு ஓர் வேண்டுகோள்!

சேலம், நவ.7

எண்ணெய்வித்து பயிர்களில் நிலக்கடலையை கார்த்திகை, மார்கழி பட்டத்தில் பயிரிடுவது அதிக மகசூலை தருகிறது. நிலக்கடலையை அறுவடைக்குப் பின் சேமித்து வைத்து அதனை அடுத்த பருவத்தில் மீண்டும் விதையாக பயன்படுத்துவது விவசாயி களிடையே நடைமுறையில் உள்ள வழக்கமாகும். இதனால் விதையிலுள்ள எண்ணெய் தன்மை அதிகமாகி அதன் முளைப்புத்திறன் பாதிக்கப்படுகிறது. எனவே நல்ல தரமான சான்று பெற்ற விதையை தேர்வு செய்வது மிகவும் அவசியம்.

நிலக்கடலை பயிரிடும் முன்முளைக் கட்டி விதைத்தல் என்ற எளிய முறையை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம். இதற்கு 140 கிராம் கால்சியம் குளோரைடை 28 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் விதையளவு 55 கிலோவை 6 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்பு ஊறவைத்த விதைகளை ஈரசாக்கின் மீது பரப்பி அதை மற்றொரு ஈர சாக்கை கொண்டு 24 மணி நேரம் மூடி வைக்க வேண்டும். பின்பு முளைகண்ட விதைகளை பிரித்து நிழலில் உலர்த்த வேண்டும். இறந்த விதைகளை தனியே பிரித்து எடுத்துவிடவேண்டும். இவ்வாறு நல்ல தரமான முளைப்புத் திறனுடைய விதைகளை தேர்வு செய்து விதைப்புக்கு பயன் படுத்துதல் நல்ல விளைச்சலை தரும்.

நிலக்கடலை பயிருக்கு முளைப்புத்திறன் 70 சதவிகிதமும், ஈரப்பதம் 9 சதவிகிதற்கு மிகாமல் இருக்க வேண்டும். விதையின் முளைப்புத்திறன், ஈரப்பதம் அறிய விரும்பும் சேலம் மாவட்ட விவசாயிகள் தங்களிடம் உள்ள ஒவ்வொரு விதைக்குவியலில் இருந்தும் 500 கிராமும் துணிப்பையில் எடுக்க வேண்டும். மேலும் ஈரப்பதம் அறிந்து கொள்ள விரும்பும் பட்சத்தில் 100 கிராம் விதையினை பாலிதீன் பையில் காற்றுபுகா வண்ணம் எடுது அதே துணிப்பையில் வைத்து விண்ணப்பக் கடிதத்துடன் இணைத்து அறை எண் 403, நான்காவது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் 636 001 முகவரியில் இயங்கி வரும் விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் நேரில் கொண்டு வந்து கொடுத்தோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி பரிசோதனை முடிவுகளை அறிந்து கொள்ளலாம். ஒரு மாதிரிக்கான பரிசோதனைக் கட்டணமாக ரூ.80/- செலுத்த வேண்டும் என வேளாண்மை அலுவலர்கள் பெ.கவிதா மற்றும் மு.நந்தினி தெரிவித்துள்ளார்கள்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

விளைநிலம் காப்போம் விழிப்புணர்வு நிகழ்வில் வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருவள்ளூர், நவ.7

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் வட்டம், இறையாமங்கலம் கிராமத்தில் 'விளைநிலம் காப்போம்' விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஜெயா வேளாண்மைக் கல்லூரி நான்காம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் 'ஊரக வேளாண் அனுபவ பயிற்சி' திட்டத்தின் கீழ் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அசோலாவின் பயன்பாடுகள் மற்றும் நுண்ணுயிர்களின் முக்கியத்துவம் குறித்து விவசாயி களுக்கு விளக்கினர். அசோலா இயற்கை உரமாகவும், கால்நடைத் தீவனமாகவும் பயன்படுவதுடன், மண்ணின் வளத்தை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை எடுத்துரைத்தனர்.



மேலும் இந்நிகழ்ச்சி வேளாண்மைத் துறையின் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வேளாண்மை சார்ந்த பல்வேறு விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் (AO), வேளாண்மை உதவி இயக்குநர் (ADA), துணை இயக்குநர் உள்ளிட்ட வேளாண்மைத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு விவசாயி களுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், இயற்கை வேளாண்மை மற்றும் அரசின் வேளாண் நலத்திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு வேளாண்மை சார்ந்த பயனுள்ள தகவல்களைப் பெற்றுப் பயனடைந்தனர்.

பழங்கள் மற்றும் காய்கறிகளில் மதிப்புக்கூட்டுதல் திறன் மேம்பாட்டு பயிற்சி

புதுக்கோட்டை, நவ.7

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பள்ளிக்கல்வி இயக்ககம், தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை நிதியுதவியுடன் பன்னிரண்டாம் வகுப்பு வேளாண்மை அறிவியல் பிரிவு தொழிற்கல்வி பயிலும் அரசு மேல்நிலைப்பள்ளி, அரிமளம், மரமடக்கி, திருவரங்குளம் மற்றும் அரசு முன் மாதிரி மேல்நிலைப் பள்ளி, மச்சுவாடி பகுதிகளைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கான 20 நாட்கள் திறன் மேம்பாட்டு பயிற்சியானது பழங்கள் மற்றும் காய்கறிகள் மதிப்புக்கூட்டுதல் தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் வேளாண் அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ம.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் பழங்களிலிருந்து ஜாம், ஜெல்லி, ஸ்குவாஷ், தயார்நிலை பானம், சிரப், பழ மிட்டாய், தக்காளி கெட்சப், உலர வைக்கப்பட்ட முருங்கைகீரை மற்றும் ஊறுகாய் தயாரிக்கும் செய்முறை பயிற்சியை முனைவர் செ.ஜேசுப்பிரியா பூர்ணகலா, தொழில்நுட்ப வல்லுநர் (உணவியல் மற்றும் ஊட்டச்சத்தியல்) வழங்கினார். மேலும் பழங்கள் மற்றும் காய்கறிகளில் ஏற்படும் பல்வேறு வகையான கெடுதல்கள் மற்றும் அவற்றைத் தடுக்கும் முறைகள், முதிர்ச்சி மற்றும் பழுக்கும் போது ஏற்படும் வினையியல் மற்றும் உயிர்வேதியியல் மாற்றங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளின் அறுவடைக்குப் பிந்தைய கையாளுதல் மற்றும் பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் வீணாகாமல் பாதுகாப்பதற்கான அடிப்படைக் கொள்கைகள் மற்றும் முறைகள், பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்துதலில் உணவு பாதுகாப்புத் தரநிலைகள், சுகாதார நடைமுறைகள் மற்றும் தயாரிப்புகளின் தரமறிதல் முறைகள் மற்றும் பழங்கள் மற்றும் காய்கறிப் பொருட்களின் பொதியிடும் முறைகள் பற்றிய பாடங் களை முனைவர் இரா. ராம்ஜெகதீஷ், தொழில்நுட்ப வல்லுநர் (பயிர் நோயியல்), முனைவர் வ.பா.இராகவேந்திரன், தொழில் நுட்ப வல்லுநர் (கால்நடைத் துறை), க.பி.செந்தில் குமார், தொழில் நுட்ப வல்லுநர் (உழவியல்) மற்றும் முனைவர் ஜெ.பாலமுருகன், தொழில் நுட்ப வல்லுநர் (மண்ணியல்) ஆகியோர் நடத்தினர். இப்பயிற்சியில 72 மாணவ மாணவியர் பங்கு பெற்று பயன் பெற்றனர். இப்பயிற்சியினை தொழில்நுட்ப உதலியாளர்கள் கருப்பசாமி, அமுல்ராஜ் மற்றும் தினகரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

மண் மாதிரி சேகரிக்கும் முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கிய வேளாண் கல்லூரி மாணவி

திருவண்ணாமலை, நவ.7

மண்ணின் வளத்தை அறிந்து, பயிர்களுக்கு ஏற்ற உர மேலாண்மையை மேற்கொள்ள மண் பரிசோதனை மிகவும் அவசியமாகும். இதற்காக மண் மாதிரிகளைச் சேகரிக்கும் போது விவசாயிகள் சரியான வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அறிவுறுத்தி உள்ளது.



மண் மாதிரிகள் சேகரிப்பதற்கு முன்பு நிலத்தின் அமைப்பு, நிறம், நிலச்சரிவு, நீர்ப்பாசன வசதி மற்றும் பயிர் சாகுபடி முறைகளைப் பொறுத்து நிலத்தைப் பல பகுதிகளாகப் பிரிக்க வேண்டும். ஒரே மாதிரியான மண் தன்மை கொண்ட பகுதிகளில் இருந்து தனித்தனியாக மண் மாதிரிகளைச் சேகரிக்க வேண்டும்.

நிலம் தரிசாக இருக்கும் காலத்தில் மண் மாதிரிகளைச் சேகரிப்பது சிறந்தது. உரமிட்ட உடனோ அல்லது பயிர் சாகுபடி செய்துள்ள நிலத்திலோ மண் மாதிரிகளைச் சேகரிக்கக் கூடாது. குறிப்பாக, உரமிட்டுப் பயிர் அறுவடை செய்த பிறகு குறைந்தது மூன்று மாத இடைவெளிக்குப் பின்னரே மண் மாதிரிகளைச் சேகரிக்க வேண்டும்.

மண் மாதிரி எடுக்கும் இடத்தில் உள்ள இலை, சருகு, புல் மற்றும் செடி ஆகியவற்றை அகற்றிவிட்டு, 'ஈ' வடிவில் குழி எடுத்து மேல்மண்ணை நீக்க வேண்டும். பின்னர் நிலத்தின் மேற்பரப்பிலிருந்து 0-15 செ.மீ. அல்லது பயிருக்கு ஏற்ற ஆழத்தில் மண்ணைச் சேகரிக்க வேண்டும்.

ஒரு ஏக்கர் நிலத்தில் குறைந்தது 10 முதல் 20 இடங்களில் மண் மாதிரிகளைச் சேகரித்து, அவற்றை நன்கு கலந்து ஒரே மாதிரியான கலவையாகத் தயாரிக்க வேண்டும். மண் மாதிரியில் கற்கள், வேர்கள் மற்றும் பயிர்க் கழிவுகள் இருந்தால் அவற்றை நீக்க வேண்டும். சேகரித்த மண்ணை நிழலில் உலர்த்தி, சுத்தமான

துணிப்பை அல்லது மண் மாதிரி சேகரிப்புப் பையில் நிரப்பி, விவரங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

மேலும், உரிய முறையில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை அருகிலுள்ள மண் பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பி பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். இதன் மூலம் மண்ணில் உள்ள சத்துக்களின் அளவை அறிந்து, தேவையான உரங்களைச் சரியான அளவில் பயன்படுத்த முடியும். இதனால் உரச் செலவைக் குறைத்து, மண் வளத்தைப் பாதுகாத்து, பயிர் மகசூலை அதிகரிக்கலாம் என வேளாண் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.



பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டில் மத்திய பட்டு வாரியம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இணைந்து செயல்பட முடிவு

கோயம்புத்தூர், நவ.7

மத்திய பட்டு வாரியத்தின் (CSB) உறுப்பினர் செயலர் பி.சிவக்குமார், கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் (TNAU) மற்றும் மேட்டுப்பாளையம் வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை (FC & RI) பார்வையிட்டு, பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி, பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் தொடர்பான கூட்டு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், மத்திய பட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இடையேபுரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. இந்நிகழ்வில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பொறுப்பு துணைவேந்தர் முனைவர் மு.ரவீந்திரன், வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் அ.பாலசுப்பிரமணியன், பட்டு வளர்ப்புத் துறை பேராசிரியரும் தலைவருமான முனைவர் க.அ. முருகேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி, மல்பெரி மரபணு வளங்களின் மதிப்பீடு, தொழில் நுட்ப மேம்பாடு, திறன் வளர்ப்பு மற்றும் பயிற்சி சார்ந்த திட்டங்களில் இரு நிறுவனங்களும் இணைந்து செயல்பட உள்ளன.

தொடர்ந்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மல்பெரி தோட்டத்தில் பழம் தரும் சிறந்த மல்பெரி நாற்றுகளை நடவு செய்யும் நிகழ்வில் பி.சிவக்குமார் பங்கேற்றார். மல்பெரி மரபியல் வளங்களைப் பாதுகாத்து மதிப்பீடு செய்து வரும் பல்கலைக்கழகத்தின் பணிகளை அவர் பாராட்டியதுடன், பட்டு வளர்ப்புத் துறையின் நிலையான வளர்ச்சிக்கு விவசாயி களுக்குப் பயனளிக்கும் நடைமுறை சார்ந்த தொழில் நுட்பங்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பின்னர், சிறுமுகை பட்டு நெசவுக் குழுமத்தில் (சாமரத்) (SAMARTH) திட்டத்தின் கீழ் நடைபெறும் பயிற்சி நடவடிக்கைகளை அவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பயனாளிகளுக்கான பயிற்சி வசதிகள் மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை ஆய்வு செய்து, நெசவாளர்களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துவதற்கு செய்முறைப் பயிற்சி, தொழில்நுட்பத் திறன் வளர்ப்புமற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த திறன் மேம்பாடு அவசியம் எனக் குறிப்பிட்டார்.



இதனைத் தொடர்ந்து, மேட்டுப்பாளையம் வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (FC & RI) பேராசிரியர்கள் கலந்துரையாடினார். பட்டு வளர்ப்புக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளின் எதிர்கால வாய்ப்புகள் குறித்து கலந் துரையாடினார், தேவை சார்ந்த ஆராய்ச்சி, புதுமையான தொழில்நுட்பங்கள், தொழில்முனைவோர் திறன், திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்பப் பரவல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் ஆராய்ச்சி, கல்வி, திறன் மேம்பாடு மற்றும் களச் செயல்பாடுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு செய்து, பட்டு விவசாயிகள், மாணவர்கள், நெசவாளர்கள் மற்றும் பட்டு வளர்ப்புத் துறையுடன் தொடர்புடைய பல்வேறு தரப்பினரும் பயனடையும் வகையில் எதிர்காலத்தில் பல்வேறு கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

கல்யாண் ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333